அன்பே சிவம்

# சைவத்தமிழ் ஆதி ஆகமமான திருமூலர் அருளிய 3000 தமிழ் மந்திரங்களில்

# 50 திருமந்திரங்கள்



அகில இலங்கை சைவ மகா சபையின்
பத்தாம் ஆண்டு நிறைவு வெளியீடு
(2013 - 2023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வாழ்த்து

**ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான் ஐந்து**
**வென்றனன் ஆறு விரித்தனன் ஏழும்பர்**
**சென்றனன் தான் இருந்தான் உணர்ந்து எட்டே.**

உலகின் முழுமுதலாக உள்ளவர் சிவபெருமான் ஒருவரே. அம்மை, அப்பராகிய சிவசக்தியாக விளங்குபவரும் அவரே. அருவம், அருவுருவம், உருவம் என மூன்றாக நிற்கின்றார். சீலம் (சரியை), நோன்பு (கிரியை), செறிவு (யோகம்) அறிவு (ஞானம்) என நால்வகை நெறிகளை காட்டியருள்பவர். ஐம்புலன்களையும் வென்றவர். ஐந்தொழில் புரிபவர். ஓர் அறிவு முதல் ஆறறிவு வரையுள்ள அனைத்து உயிர்களிற்கும் அருள்வதற்கு ஆறாக விரிந்தவர். ஏழுவகை பிறப்பையும் ஏழு உலகையும் ஆருயிர்கட்கும் அளிக்கும் ஏழிசையாய் உள்ளவர். பேரருளுடமை முதலான எண்குணங்களை உடைய இறை சிவன் அவற்றை உயிர்கட்கு உணர்த்தி அருள்கின்றார்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே. — திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைசிவனே முழுமுதற் கடவுள்

**சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை**
**புவனம் கடந்து அன்று பொன் ஒளி மின்னும்**
**தவனச் சடை முடித் தாமரை யானே.**

சிவபெருமானோடு ஒப்பாகும் தெய்வம் எங்குத் தேடினும் இல்லை அச்சிவனுக்கு நிகரானவர் யாவரும் இலர். எல்லா உலகங் கட்கும் அப்பாற்பட்டுள்ளவன். அச்சிவன் பொன் போல ஒளிவிடும் தீ வண்ணம் போன்ற சடைமுடி உடையவன். இச்சிவன் அன்பர்களின் மனத் தாமரையில் அமர்ந் திருப்பான்.

**எத்தெய்வத்தை நாம் வழிபட்டாலும் அத்தெய்வமாகி மாதொரு பாகனாகிய சிவபெருமானே வந்து அருள் செய்வார் என்பது சைவசித்தாந்த கோட்பாடாகும்.**

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வணக்கம்

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.**

குருவினது அழகிய வடிவத்தை தரிசிப்பதே அறிவின் விளக்கமாகும் அவருடைய திருப்பெயரை உச்சரித்தலே நம் அறிவிற்கு விளக்கம் ஆகும். அவருடைய சிறந்த உபதேசங்களைக் கேட்டலே அறிவின் தெளிவாகும். அவருடைய வடிவத்தை உள்ளத்தில் நிலையாகக் கொண்டு தியானம் பண்ணுதலே அறிவின் தெளிவாகும்.

**பக்குவ நிலையிலுள்ள உயரிய புண்ணியங்கள் செய்த மனிதருக்கு இறைவனே குருவாக வருவான். மணிவாசகரை குருந்த மரநிழலில் இறைவன் திருப்பெருந்துறையில் குருவாக வந்து ஆட்கொண்டான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே.**

உண்மை அறிவு இல்லாதவர் அன்பு வேறு சிவம் வேறு என பிரித்து இரண்டாகக் கூறுவர். அத்தோடு அன்புதான் சிவமாக விளங்குவது என்று உணர்ந்திலரே. இந்த உண்மையான அன்புதான் சிவமாகும் என்பதை அறிந்த பிறகு அன்பே சிவமாக இருப்பதை அனுபவித்து இன்புற்று இருப்பர்.

**சிவபெருமான் அன்பு மயமானவன் என்பதற்கு பன்றிக் குட்டிகளுக்கு தாயாக வந்தமை, ஆதரவற்ற பெண்ணுக்கு தாயாக வந்து மகப்பேறு பார்த்தமை, செம்மணச் செல்விக்கு கூலியாளாக வந்தமை போன்ற கதைகளை மனம் கொள்க.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக் கமலப் பூசை

**உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலன் ஐந்தும் காளமணி விளக்கே.**

நமது மனமே பெரிய கோயில் அக் கோயிலின் கருவறை என்பு தசையிலான உடம்பு. அன்பர்களின் குறிப்பறிந்து கொடுத் தருளும் வாயே கோபுரவாசல் ஆகும். நன்கு தெரிந்த ஞானிக்கு ஆன்மாவே சிவலிங்கம் ஆகும். மனதை உலக இன்பங்கள் வழியே இழுத்துச் செல்லும் ஐம்புலன்களும் அழகிய விளக்குகளாகும்.

**புற விடயங்களை விட உள்ளத்திலே தூய்மையோடு நல்லெண்ணம், நற்செயல்களோடு இறைவனை வழிபடுவதே உயர்ந்தநிலை ஆகும். உள்ளக்கமல உத்தமனார் வேண்டுவது என்கிறார் சுவாமி விபுலானந்தர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழை அடியவருக்கு ஈய்ந்தால் அது ஆண்டவனை சாரும்

**படமாடக் கோயில் பகவற்கு ஒன்றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றீயில்**
**படமாடக் கோயில் பகவற்க தாமே.**

சித்திரங்களும் ஓவியங்களும் அமைத்த மாடங்களையுடைய கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நாம் ஒரு பொருளை காணிக்கையாகச் செய்தால் அது நடமாடும் உடம்பாகிய கட்டிடத்தில் வாழும் இறைவனுக்கு ஒப்பான ஏழை அடியவரைச் சாராது. ஆனால் நடமாடும் கோயிலான ஏழை அடியவர்களுக்கு நாம் ஒன்று கொடுத்தால் அது மாடக் கோயிலில் இருக்கும் இறைவனைச் சாரும். ஆண்டவன் பொருட்டு திருப்பணிக்கு ஈவதை விட அவனது ஏழை அடியவரின் அறப்பணிக்கு ஈதலே சிறப்பானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறத்தை எந்த வகையிலேனும் செய்யலாம்

**யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.**

இறைவனை ஒரு பச்சிலையிட்டு வழிபடல் எல்லோராலும் செய்யக் கூடியதாகும். பசுவுக்கு ஒரு வாய் உணவு கொடுத்தல் எவராலும் முடியக்கூடியதாகும். ஒரு கைப்பிடி உணவினை ஏழைகட்கு இட்டு உண்ணுதல் யாவர்க்கும் இயலும் செயல் ஆகும். பிறரிடம் இனிய மொழிகளைப் பேசுதல் யாவர்க்கும் செய்யக்கூடிய செயலாகும்.

**சைவசித்தாந்தப்படி பசு என்பது உயிர்களை குறிக்கும் எந்தவொரு உயிருக்காவது உணவு அளித்தல் என்கின்ற உன்னத எளிமையான அறத்தை பசுவுக்கு ஒரு வாயுறை குறிக்கிறது எனவும் கொள்ளலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமையான சிவபூசையால் இறையருள் பெறலாம்

**புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண்டு அருள் புரியா நிற்கும்**
**எண்ணில் பாவிகள் எம் இறை ஈசனை**
**நண்ணறி யாமல் நழுவுகின் றாரே.**

சிவபூசையாகிய புண்ணியம் செய்வார்க்கு பூவும் நீரும் இருக்கின்றது. இவற்றைக் கொண்டு சிவபெருமானை பூசித்தாலே அவன் அருள் புரிவான். இந்த எளிமையான முறையை மேற் கொள்ளாமல் கணக்கற்ற பாவிகள் இறைவனை அணுகுதல் அறியாமல் எங்கோ நழுவி போகின்றார்களே என்னே அவர்கள் அறியாமை!

**இறைவனை எவரும் பூவும், நீரும் கொண்டு மிக இலகுவாக அன்புணர்வோடு வழிபடலாம். இதனையே "சலம் பூவோடு தூபம் மறந்து அறியேன்" என்கிறார் நாவுக்கரசர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்று சிறப்பு

**கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை**
**மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்**
**தங்கா வினைகளும் சாரும் சிவகதி**
**சிங்கார மான திருவடி சேர்வரே.**

உலக முடிவில் அனைத்தையும் அழித்து அதன் போது எஞ்சிய எலும்புகளை மாலையாக அணியும் பற்றற்ற தன்மையை எடுத்துக் காட்டும் கங்காளனாகிய இறைவன் பூசிக் கொள்ளும் உடலுக்கு கவசமாக விளங்கும் திருநீற்றை சிறிதும் தடையில்லாது உடலில் பூசி மகிழ்ந்தால் தீவினைகள் நீங்கும். மோட்ச இன்பம் அடைய வழி உண்டாகும். இறை சிவனின் அழகிய திருவடிகளை அடையலாம்.

திருநீற்றுப் பதிகத்திலே "மந்திரமாவது நீறு" என தொடங்கி ஈழத்து சைவத்தமிழ் வேந்தனாகிய "இராவணன் மேலது நீறு" என பண்டைய காலம் தொடக்கம் எம் முன்னோர் சிறப்பாக திருநீற்றை பேணியமை ஞானசம்பந்தர் புகழ்ந்து பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடி மகிமை

**மந்திரம் ஆவதும் மாமருந்து ஆவதும்**
**தந்திரம் ஆவதும் தானங்கள் ஆவதும்**
**சுந்தரம் ஆவதும் தூய்நெறி ஆவதும்**
**எந்தை பிரான்தன் இணையடி தானே**

மந்திரம், மருந்து, தந்திரம், உலகம் அழகு, அறம், நல்வழி ஆகிய இவையாவும் எமது தலைவனாம் இறை சிவனது திருவடிகளே ஆகும். உயிர், உணர்வு, உள்ளம், உடை, உறையுளிற்கு அழகினைத் தருவது திருவடிகளே.

சைவத் தமிழர்களிற்கு திருவடி வழிபாடு மிக முக்கியமானது சிவனொளி (சிவனடி) பாதமலையில் இறை சிவனது திருவடிகள் தொன்று தொட்டு வழிபடப்பெற்று வருகின்றது. மணிவாசகர் முதல் 15 வரிகளில் சிவபுராணத்தில் இறைவனது திருவடி பெருமையைப் பேசுகின்றார். இம் மந்திரக் கருத்தை திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் எடுத்து ஆண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியமம் (நன்று ஆற்றல்)

**தூய்மை அருள்ஊண் சுருக்கம் பொறை செவ்வை**
**வாய்மை நிலைமை வளர்தலே மற்றிவை**
**காமம் களவு கொலை எனக் காண்பவை**
**நேமிஈர் ஐந்தும் நியமத்தன் ஆமே.**

உள்ளம் பரிசுத்தன் ஆதல், அருளுடையனாதல், அளவான உணவு உண்பவனாதல், பொறுமை உடையவனாதல், செம்மையுடையவனாதல், காமம், களவு கொலை இவற்றினின்று நீங்கியவனாய் இருத்தல் ஆகிய இவற்றில் நியமமோடு இருப்பவனே நியமத்தவன் ஆவான்.

**இங்குள்ள நியமப் பண்புகளை திருக்குறளின் அருளுடைமை, பொறையுடைமை, மருந்து கொல்லாமை, வாய்மை போன்ற அதிகாரங்களுடன் ஒப்பு நோக்குக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியமத்தவர் கடமைகள்

**தவம்செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்**
**சிவன்தன் விரதமே சித்தாந்தக் கேள்வி**
**மகம் சிவபூசை ஒண்மதி சொல்லீர் ஐந்து**
**நிவம்பல செய்யின் நியமத்த னாமே**

தனித்திருந்து இறைவனை சிந்தித் தலாகிய தவம், ஐந்தெழுத்தாகிய நமசிவாயத்தை ஓதும் செபம், பெற்ற அளவில் மகிழ்தல், இறைவன் உண்டு என்ற நம்பிக்கையோடு வாழும் ஆத்திகம், வறியோருக்கு ஈதலாகிய மனம், சிவ விரதம், சைவ சித்தாந்த மெய்யியல், தேர்ச்சி சிவபூசை, சிவஞானம் ஆகிய சிறப்பு வாய்ந்த பத்து விடயங்களில் கடமைகளில் ஈடுபாடு உடை யவனே நியமத்தனாவான்.

தவம் செய்வார் தம்கருமம் செய்வார் மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுள் பட்டு

– திருக்குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயமம் (தீது அகற்றல்)

**கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்கம் உடையான் நடுச் செய்ய**
**வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்நாமம்**
**இல்லான் இயமத்து இடையில் நின்றானே**

கொலை செய்யாதவனும் பொய் பேசாதவனும் திருட்டுக் குணம் இல்லாதவனும், மதிக்கத்தக்க நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவனும், நல்லவனும் அடக்க முடையவனும், நடுநிலமையுடையவனும், கிடைத்ததை பிறருக்கும் பங்கிட்டு உண்பவனும், குற்றம் அற்றவனும், கள் குடி இல்லாதவனும், காமவேட்கை அற்றவனும் எவனோ அவனே இயமம் என்னும் பயிற்சியில் நின்றவன் ஆவான்.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து**
**அறன் ஆகல நீர பிற**

– திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

**யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான்பற்றத் பற்றத் தலைப்படும் தானே**

இறைவன் திருவருளால் யான் இறைவனது இன்பத்தை பெற்றனன். இவ் வின்பத்தினை இந்த மண்ணுலகம் பெற வேண்டும். எல்லாப் பெருமையினை தன்னகத்தே கொண்ட எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்துள்ள இறை சிவனாகிய உண்மைப் பொருளின் பெருமைகளை இன்னது என எடுத்துக் கூறினால் அவருடைய நாமமாகிய நமசிவாயமே நாவாகிய தசையினைப் பற்றி நின்ற உணர்ச்சி தரும் மந்திரமாகும். இந்த மந்திரத்தைப் பற்ற பற்ற இறைவன் திருவடி ஞானமும் சகல சிறப்புக்களும் கிடைக்கப் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றே குலம்

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து**
**நன்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே**

குலம் பல இல்லை, ஒன்றே தெய்வங்கள் பல இல்லை ஒன்றே ஆகும் என்றும் நல்லனவற்றையே கூசாமல் எண்ணுங்கள் இயமன் அணுகான். அவ்வாறு நல்லன வற்றைச் சிந்தித்தலாகிய அதைத் தவிர்த்து வேறு சிந்திப்பதற்கு உங்கள் உள்ளத்தில் இடம் இல்லாது செய்யுங்கள். உங்கள் பூத உடல் மறைந்தாலும் புகழ்உடல் என்றும் நிலைத்து இருக்க இறைவனை நினைந்து நல்லனவற்றை நினைந்து ஈடேறுங்கள்.

**சாத்திரம் பேசும் சாழுக்கர்காள்**
**கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்.**

– திருநாவுக்கரசர் தேவாரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை சைவசித்தாந்திகள்

**கற்பன கற்றுக் கலைமன்னும் மெய்யோகம்**
**முற்பத ஞானம் முறைமுறை நண்ணியே**
**சொற்பதம் மேவித் துரிசற்று மேலான**
**தற்பரம் கண்டுளோர் சைவ சித்தாந்தரே.**

கற்க வேண்டிய தத்துவ மெய்யியலை தெளிவறக் கற்று நூல்களில் பொருந்திய உண்மையான சிவயோக முதலான பத ஞானங் களை முறை முறையாக அடைந்து சமாதி நிலை பொருந்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை அழித்து மேலான பரம் பொருளைக் கண்டுள்ளோர் சைவசித்தாந்திகள் ஆவார்.

**இறை (பதி) உயிர் (பசு) தளை (பாசம்) எனும் முப்பொருள் உண்மை பேசும் சைவசித்தாந்தமே உலகின் ஆதியான தலைசிறந்த மெய்யியல். அது தமிழர்கள் உலகிற்கு தந்த கொடை. அதனை வேற்று மொழி, மத அறிஞர்களும் ஏற்று புகழ்ந்துள்ளனர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையருள் நல்லன எல்லாம் தரும்

**அருள்கண் இலாதார்க்கு அரும்பொருள் தோன்றா**
**அருள்கண் உளோர்க்கெதிர் தோன்றும் அரனே**
**இருள் கண்ணி னோர்க்கங்கு இரவியும் தோன்றா**
**தெருள்கண்ணி னோர்க்கெங்கும் சீர்ஒளி ஆமே.**

இறைவன் அருள் இல்லாதவர்களின் பார்வைக்கு அரும் பொருளாகிய இறைவன் தோன்றான். அருள்கண் உள்ளவர்கட்கு இறைவன் எதிரே தோன்றுவான். பேர் ஒளியுடைய சூரியனும் இருள்கண் உடைய வர்கட்குத் தோன்ற மாட்டான். தெளிந்த அறிவுக்கண் உடையவர்கட்கு எங்கும் சீரிய ஒளி விளங்கும்.

**"தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா**
**மனம் தரும் நல்லன எல்லாம் தரும்"**

– அபிராமி அந்தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னை நன்றே தமிழ் செய்ய இறைவன் படைத்தனன்

**பின்னை நின்றென்னே பிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ்செய்யும் ஆறே.**

இறைவன் திருவருளை முன்னின்று பெறாது பின்னடிப்பதால் பிறவி எடுக்க நேரிடுகின்றது. என்னே அறியாமை! இவ்வாறு மக்கள் முற் பிறவியிலே நல்ல தவத்தை முயன்று செய்திலர். நானோ தவம் செய்தவன். அதனால் தான் என்னை இறைவன் நன்றாக அமிழ்தினும் இனிய இறை மொழியாக தமிழிலே இறை மெய் யியலை அறம், பொருள், இன்பம் வழியே நல் முறையில் வாழ்ந்து வீடு பேறு அடைதலாகிய நல்வழியை காட்டும் நெறியை உலகிற்கு அறிவிக்க நன்முறையில் படைத்தனன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசிவ என்னச்
# சிவகதி கிடைக்கும்

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே.**

கொடிய பாவத்தையுடையவர்கள் சிவசிவ என்று கூறாமல் இருக்கின்றனரே. சிவசிவ என்று கூறினால் கொடிய பாவங்கள் அழியுமே. சிவசிவ என்று கூறிவந்தால் தேவர்கள் ஆகலாமே. சிவசிவ என்று கூறிச் சிவ கதியையும் அடையலாம்.

சிவ என்னும் மந்திரம் இறைவனையும் இறைவியையும் குறிக்கும். சி - இறைவன், வ- இறைவி, ஆகவே இம் மகா மந்திரத்தை ஓதுவது அம்மை அப்பனை நினைத்தாகும். இதனால் அவர்கள் அருளையும் பூரணமாகப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுக்கு ஒரே தெய்வம்

**ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும்**
**ஒன்று கண்டீர் உலகுக்குயிர் ஆவதும்**
**நன்று கண்டீர் இனிநமச்சி வாயப்பழந்**
**தின்று கண்டேற்கிது தித்த வாறன்றே**

உலகுக்கெல்லாம் ஒப்பற்ற ஒரு தெய்வமாம் சிவபெருமானை தேடிக் கண்டு கொள்ளுங்கள். அவரே உலகுக்கு உயிராய் இருக்கிறார் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள். அந்தப் பரம் பொருள் மிக நல்ல பொருள் என்பதையும் கண்டு கொள்ளுங்கள். அப்பொருள் தான் நமசிவாயக் கனியாகிய இனிய பொருளாக உள்ளது. அந்த இனிய கனியை நன்கு தின்று கண்டபோது (தொடர்ச்சியாக உச்சரித்துக் கொண்டிருந்தபோது) இனித்தது.

நாதன் நாமம் நமச்சிவாயவே – சம்பந்தர்
நற்றுணையாவது நமச்சிவாயவே – அப்பர்
சொல்லுநா நமச்சிவாயவே – சுந்தரர்
நமச்சிவாய வாழ்க – மணிவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னை நாடுகின்றவர்களை சிவன் நீங்கான் மறவான்

**பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன்**
**இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்**
**துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்**
**மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே.**

சிவபெருமான் என்றும் பிறவாதவன். பேரருளாளனும் அவனே ஆவான். அவன் இறப்பும் இல்லாதான். எத்தகைய உயிர்கட்கும் இன்பம் அருள்பவன் அன்பர்களை விட்டு நீங்காதவன். இத்தகைய இயல்புடைய இறைவனைத் தொழுங்கள் அங்ஙனம் தொழுதால் அவன் உங்களை கைவிடாது மறவாது அருள்புரிவான். அழியாத சிவஞானத்தையும் தருவான்.

பிறவாயாக்கை பெரியோன் என சங்க இலக்கியங்களில் சிவபெருமான் போற்றப்படுவதை பிறப்பிலி எனும் இந்த திருமந்திரத்துடன் ஒப்பு நோக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டுநெறி
# (தாச மார்க்கம்)

**எளி அனல் தீபம் இடல்மலர் கொய்தல்**
**அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்**
**பளிமணி பற்றல் பல்மஞ் சனம்ஆதி**
**தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கம்.**

செய்வதற்குச் சுலபமான முறையாகிய திருவிளக்குகளைத் திருக்கோயிலில் அமைத்தல், பூக்கொய்து இறைவனை வழிபடல், அன்புடன் பசுச் சாணத்தால் திருக் கோயில் மெழுகுதல், திருக்கோயிலில் உள்ள குப்பை கூளங்களைக் கூட்டித் தூய்மை செய்தல், இறைவன் திருமுன் நின்று நாம் வாழ அவனை வாழ்த்துதல், திருக்கோயில் மணிகளைப் பற்றி ஒலித்தல், இறைவ னுக்குரிய திருமுழுக்குப் பொருள்கள் (அபிசேகப் பொருட்கள்) முதலானவற்றை வழங்குவது தாசமார்க்கமாகும்.

தொண்டு நெறியில் நின்றவர் திருநாவுக்கரசர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன்மை நெறி
# (சற்புத்திர மார்க்கம்)

**பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்**
**ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை**
**நேசித்திட்டு அன்னமும் நீசுத்தி செய்தன்மற்**
**றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே.**

இறைவனைப் பூசை செய்தலும், அவனது புகழ்களையே வாசித்தலும், அவனையே போற்றுதலும் செபம் செய்தலும், குற்றமில்லாத நல்ல தவத்தைச் செய்தலும் சத்தியத்தோடு நடத்தலும், பெறாமைக்கு இடம் இல்லாமல் இருத்தலும், அன்பு கொண்டு அன்னப்பறவை போல ஆன்ம சுத்தி செய்தலும், மற்றும் பலவாகிய குற்றம் அற்ற செயல்களை மேற் கொள்ளுதலும் சற்புத்திர மார்க்கம் ஆகும்.

**மகன்மை நெறியில் நின்றவர் திருஞானசம்பந்தர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமை நெறி
# (சக மார்க்கம்)

**வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியை**
**தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை**
**ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்**
**ஆத்தம்செய் தீசன் அருள்பெற லாமே.**

வாழ்த்த வல்லார் மனத்தினுள் பொருந்திய ஒளி வடிவினன், தூய வடிவினன், தூய மனத்தார் உள்ளத்தில் திளைக் கின்றவன். இத்தகைய இயல்புடைய ஈசனைப் போற்றி, எம் பெருமான் என்று சொல்லி வணங்கி, நண்பன் என்று கருதி வழிபட்டால் அவன் அருளைப் பெறலாம்.

**தோழமை நெறியில் நின்றவர் சுந்தரமூர்த்தி நாயனார். சுந்தரர் பித்தாபிறை சூடி பெருமானே அருளாளா என உரிமையோடு தோழனாக பாடிப்பரவி இந்த உலக வாழ்வின் இன்பங்களையும் பெற்று கைலாசப்பேற்றை பெற்றார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானநெறி
# (சன் மார்க்கம்)

**ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை**
**ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று**
**ஞானத்தின் மிக்கவை நல்முத்தி நல்காவாம்**
**ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே.**

உண்மை ஞானத்தைவிட, அதாவது இறை ஞானத்தைவிட மிக்க தர்மநெறி உலகில் வேறு எதுவும் கிடையாது. இந்தப் பரஞானத்தை விட மிக்கவை என்று சொல்லப் படுபவை எவையாயினும் நல்ல மோட்ச இன்பத்தைத் தரமாட்டா. ஆகவே மெய்ஞ் ஞானத்தில் மிக்கவர் மண்ணுலக மக்களே ஆயினும் உயர்ந்தவர்களே ஆவர்.

ஞானநெறியில் நின்றவர் மாணிக்கவாசகர். இவர் ஊன்கலந்து உயிர்கலந்து உவிட்டாமல் இனிக்கும் பக்தி ரசம் கரைபுரண்டோடும் திருவாசகத்தேனை உலகிற்கு ஞானநிலையில் உச்சத்திலிருந்து தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள் குடியர் கருத்தறியாரே

**உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்**
**வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்**
**தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்**
**கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே.**

கள்ளுண்பவர் என்றும் உள்ள உண்மைப் பொருளாகிய பரம் பொருளை ஆராயமாட்டார். தம்மையும் தம்மை இறைவனுடன் ஒன்றச் செய்யாத தடைகளையும் உணரார். வள்ளலாகிய சிவனது அருளால் வாழவும்மாட்டார். தெளிந்த உண்மையாகிய ஞானத்தைத் தெளிவிக்கும் சிவபோகத்தையும் சேர மாட்டார். இந்த குணங்களுக்குக் காரண மானவர்கள் கள்ளைக் குடிக்கும் மக்களே ஆவார். இவர்கள் உண்மைக் கருத்தையும் உணர மாட்டார்கள்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்வர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.

– திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லார் மனத்திற்கு கலவான் கடவுள்

**நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து**
**நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள்**
**எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்**
**கல்லார் நெஞ்சத்துக் காணஒண் ணாதே.**

நில்லாதனவற்றின் நிலையை நிலையாக நிற்பனவாகக் கொண்ட மன முடையவர்களே! நிற்காத உடம்பையும் நிலை என்று உணரும் மக்களே! இறைவன் எல்லா உயிர்க்கும் தலைவன்தான், என்றாலும் எதையும் கல்லாதார் மனத்தில் அவனைக் காண முடியாதே.

இளமையிலே எம் குழந்தைகளை அறிவு நூல்களையும் அறம் சார்ந்த மற்றும் தேவார, திருவாசக, திருமந்திர ஆகிய ஞானப் பனுவல்களையும் கற்க தூண்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவு நின்றார் சிவம் ஆவார்

**நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்**
**நடுவுநின் றான்வல்ல நான்மறை ஓதி**
**நடுவுநின் றார்சிலர் ஞானிகள் ஆவோர்**
**நடுவுநின் றார்நல்ல நம்பனும் ஆமே.**

கரிய மேகம் போன்ற நிறமுடைய திருமால், தான் காக்கும் தொழிலில் வேறுபாடு காட்டாமல், நடுநிலையோடு நின்று தன் தொழிலை நடத்தி வருகிறான். அவனைப் போலவே நான்மறை கூறிப் படைப்பதில் வன்மை மிக்க பிரம்மதேவனும் தன் படைப்புத் தொழிலை நடு நிலையோடு செய்து வருகின்றான். ஞானிகளாக இருப்பவர்களுள் சிலரும் நடுநிலை தவறாத வர்கள். இவ்வாறு நடுநிலை தவறாது நின்றவர்கள் சிவனாக விளங்குவார்.

நன்றே தரினும் நடுவிகந்தால் ஆக்கத்தை
அன்றே ஒழியவிடல்

– திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடம்மை வளர்த்தல் இன்றியமையாதது

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்மை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்மை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.**

உடம்பு அழிந்தால் உயிரும் அழியும், உறுதியான மெய்ஞ்ஞானத்தை அடைய முடியாது. ஆகவே, உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து கொண்டேன். எனவே உடம்மை வளர்த்தேன். அதனால் உயிரையும் வளர்த்துக் கொண்டேன்

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு

– திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியானமே கடவுளைக் காணும் வழி

**எண்ணா யிரத்தாண்டு யோகம் இருப்பினும்**
**கண்ணால் அமுதினைக் கண்டறி வார்இல்லை**
**உண்ணாடி யுள்ளே ஒளியுற நோக்கினால்**
**கண்ணாடி போலக் கலந்திருந் தானே.**

எண்ணாயிரம் வருடகாலம் யோகத்தில் இருந்தாலும் அமுதமாம் சிவனைக் கண்ணார கண்டவர் இலர். ஆனால் உள்நாடியாகிய சுழுமுனை நாடியில் ஒளி வடிவாகத் தியானிக்கின் கண்ணாடியின் ஒளிபோலத் தியானிப்பவருடன் கலந்து இறைவன் இருப்பன்.

**தியானம் என்கின்ற நீள நினைதலும்**
**பிராணாயாமம் என்கிற மூச்சுப் பயிற்சியும்**
**குழந்தைகள் யாவருக்கும் சிறுவயதில் இருந்தே**
**கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனத்தீர்த்தம் ஆடாமல் மண்தீர்த்தம் ஆடலின் பயனில்லை

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்விஇல் லோரே.

அவர் அவர் உள்ளத்தில் பல நல்ல தீர்த்தங்கள் உள்ளன. அப்படி இருந்தும் தம் கொடிய பாவங்கள் ஒழிய அவற்றில் நீராட மாட்டார்கள். அவர்கள் மேடு பள்ளம் உள்ள இடத்தில் நீர்த் தேக்கத்திற்குச் சென்று ஆடுகின்றார்களே. இவர்கள் கள்ள உள்ளம் படைத்தவர் ஆவார். கல்வியும் இல்லாதவர் ஆவர்.

கங்கை ஆடினும் காவிரி ஆடினும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே என இக்கருத்தை அப்பர் பெருமானும் தேவாரத்தில் பாடியுள்ளதை மனம் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் குழைந்தால் ஆண்டவனை அடையலாம்

**என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போல கனலில் பொரிய வறுப்பினும்**
**அன்போ டுருகி அகம்குழை வார்க்கன்றி**
**என்போல் மணியினை எய்தஒண் ணாதே.**

எலும்பையே விறகாக இட்டு, தசையினை அறுத்துப் போட்டு, பொன் வடிவான தீயில் பொரியும் படி வறுத்தாலும், இறைவனை அடைய முடியாது. ஆனால் அன்புடன் உள்ளம் உருகுபவர்கள் என்னைப் போல மனமணியாகிய இறைவனை அடையலாம்.

**கண்ணப்ப நாயனாருடைய வரலாறு அனைவரும்**
**மனனங்கொள்ள வேண்டியது. கண்ணப்பன்**
**"ஒப்பதோர் அன்பு இன்மை கண்டபின் என"**
**மணிவாசகர் திருவாசகத்தில் பாடியுள்ளார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பினால் அரனைக் காணலாம் எனல்

**கண்டேன் கமழ்தரு கொன்றை யினான்அடி**
**கண்டேன் கரியுரி யான்தன் கழல்இணை**
**கண்டேன் கமல மலர்உறை வான்அடி**
**கண்டேன் கழலதென் அன்பினுள் யானே.**

மணம் வீசும் கொன்றை மலர் அணிந்த இறைவன் திருவடிகளைக் கண்டனன். யானைத் தோலைப் போர்த்துள்ள இறைவனது இரண்டு திரு வடிகளைக் கண்டனன். மனமாகிய தாமரை மலரில் வாழ்பவனது திருவடிகளைக் கண்டனன். இத்துணைக்கும் காரணம் அன்புதான். ஆகவே, என் உள்ளத்தில் அன்பினால் இறைவனது திருவடிகளைக் கண்டனன்.

அன்பின் வழியது உயிர்நிலை என்பார் திருவள்ளுவர். திருமந்திரத்தில் பல இடங்களில் அன்பின் உன்னதத்தில் மட்டுமே சிவனைஅடையலாம் என்பதை திருமூலர் வலியுறுத்தி நிற்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வம் உள்ள போதே அறம் செய்க

அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமும் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
இழிக்கவன்று என்செய்வீர் ஏழைநெஞ் சீரே.

இரங்கத்தக்க ஏழை மனம் பெற்ற மக்களே! ஆணவமாகிய அழுக்கினை ஏறத் தள்ளி, மெய்ஞ்ஞான அறிவால் நிறைந் திருக்கவில்லை, கல்வி, செல்வம் முதலா னவை உங்களைத் தழுவி இருக்கும் நாளில் அறத்தைச் செய்யாமல் இருக்கிறீர்களே! கண்கொண்டு பார்த்திருந்தும் என்ன செய்வீர்கள்! நீங்கள் செய்துள்ள கொடிய பாவங்கள் சூழ்ந்து உங்களை நிலையினின்று தள்ளுமே, அப்போது என்ன செய்வீர்?

**அறம் செய்ய விரும்பு என ஔவையும் அறத்தால் வருவதே இன்பம் எனவும் வள்ளுவரும் குறிப்பிட்டுள்ளனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசனை போற்றினால் அருள் பெறலாம்

**அப்பனை நந்தியை ஆரா அமுதினை**
**ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை**
**எப்பரிசு ஆயினும் ஏத்துமின் ஏத்தினால்**
**அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே.**

அப்பனாகவும் நந்தியாகவும் தெவிட்டாத அமுதமாகவும் ஒப்பற்ற வள்ளலாகவும் ஊழிக்கால முதல்வனாகவும் விளங்கும் இறைசிவனை எவ்வாறேனும் போற்ற வேண்டும். எம் முறையினாலும் போற்றி வழிபட்டால் அவ் வண்ணமே அவ் இறைவன் திருவருளைப் பெறலாம்.

**வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்டும் முழுதும் தருவோய் நீ என்று இதனையே திருவாசகத்தில் மணிவாசகர் பாடியுள்ளார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நரகத்தில் சேர்வார் இவர் இவர் எனல்

**பரவப் படுவான் பரமனை ஏத்தார்**
**இரவலர்க் கீதலை ஆயினும் ஈயார்**
**கரகத்தால் நீரட்டி காவை வளர்க்கார்**
**நரகத்தில் நிற்றிரோ நல்நெஞ் சீரே.**

விண்ணவர் மண்ணவர் என எல்லோராலும் தொழப்படுவராகிய சிவ பெருமானை வணங் காராகித் தம்மை வந்துயாசித்த யாசகர்கட்குக் கொடுக்கக் கூடியதையும் ஈயமாட்டாராகி இருப்பர், நீர்குடம் முதலியவற்றான நீர் முகர்ந்து எல்லோருக்கும் நல்ல பயன் தரும் சோலை களை வளர்க்கார். நல்லறம் புரியாது நாளை வீணாக்கி சாவை நெருங்கினீரே நீங்கள் கடைசியில் நரகத்தில் சென்று இருப்பீரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபடும் முறையும் பயனும்

**அன்புடனே நின் றமுதம் ஏற்றியே**
**பொன்செய் விளக்கும் புகைதீபம் திசைதொறும்**
**துன்பம் அகற்றித் தொழுவோர் நினையுங்கால்**
**இன்புட னேவந் தெய்திடும் முத்தியே.**

அன்புடன் முன்நின்று நிவேதனம் செய்து, பொன் போல் ஒளிவிடும் விளக்கை ஏற்றி, நான்கு திசையும் புகை தீபம் காட்டி, துன்பம் யாவற்றையும் நீக்கித் தொழுகின் றவர்கள், நினைத்துப் பார்த்தால், இவ்வுலக இன்பத்தையும் மறுமை இன்பமான முக்தி இன்பத்தையும் அடைவர்.

**இறைவனுக்கு குங்கிலியப் புகைதீபம், ஏற்றும் பணியை மிக்க வறுமையிலும் செய்து முக்தி இன்பம் பெற்ற குங்கிலியகலய நாயனாரை மனங்கொள்க.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நால்வகைப் பூசை

**உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞானப் பூசை**
**உயிர்க்கொளி நோக்கல் மகாயோகப் பூசை**
**உயிர்ப்பெறும் ஆவா கனம்புறப் பூசை**
**செயிற்கடை நேசம் சிவபூசை ஆமே.**

உயிர்க்கு உயிராய் இறைவன் ஒன்றாய் இருத்தலை அறிதல் ஒளியுடைய ஞான பூசை ஆகும். உயிர்கட்கு ஒளி தருகின்ற இறைவனை உள்ளத்தில் நோக்குதல் பெரிய யோகப் பூசையாகும். இறைவனிடத்தில் பிராணப் பிரதிட்டை ஆகிற ஆவாகனம் செய்தல் புறப்பூசை ஆகும். கடைசியாக அவ் இறைவனை அன்புடன் வழிபடுவது சிவ பூசை ஆகும்.

**இங்கு சீலம் (சரியை), நோன்பு (கிரியை), செறிவு (யோகம்), அறிவு (ஞானம்) என நாற்பாத பூசைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியானத்தின் பயன்

**பூவினில் கந்தம் பொருந்திய வாறுபோல்**
**சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது**
**ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு**
**நாவி அணைந்த நடுதறி ஆமே.**

மலரில் மணம் பொருந்தி இருப்பது போலச் சீவான்மாவுக்குள்ளே பரமான்மா வாகிய சிவமணம் பூத்திருக்கிறது. இச் சிவ மணத்தைச் சுவரில் எழுதப்பட்ட ஓவியம் போலத் தியான சமாதியில் இருந்து அறியும் அறிவாளர்கட்குப் புனுகு மனம் சேர்ந்த மூங்கில் போல அவர்கள் உயிர் சிறப்ப டையும்.

**"நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கை தொழுவேன்" என்கிறார் சுந்தரர் நீள நினைதல் என்பது தியானமாகும். அது இகபர சுகங்களைத் தரும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தெழுத்தின் மாண்பு

**வாறே சிவாய நமச் சிவாயநம**
**ஆறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை**
**வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்**
**வாறே செபிக்கில் வரும் செம்பு பொன்னே.**

பஞ்சாட்சரத்தைச் செபிக்கின்ற முறையாவது எதுவெனில், சிவாயநம சிவாயநம என்று இடை விடாது செபித்தல் ஆகும். அவ்வாறு செபித்தால் வரக்கூடிய பிறப்பு உண்டாகாது. மேலும், இறைவன் திருவருளால் வளரும் ஆனந்த நடனத்தைக் கண்டு தரிசிக்கலாம். ஆணவமாம் செம்பினின்று அறிவொளியாம் பொன்னினைப் பெறலாம்.

**நாயேனும் தவம் செய்தேன் சிவாயநம எனப்**
**பெற்றேன் தேனாய் இன்னமுதாய் தித்திக்கும்**
**சிவபெருமான் தானே வந்து அருள் செய்தான்.**

– திருவாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனைத் தேட எய்தும் பயன்

**நாடவல் லார்க்கு நமன்இல்லை கேடில்லை**
**நாடவல் லார்கள் நரபதி யாய்நிற்பர்**
**தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது**
**கூடவல் லார்கட்குக் கூறலும் ஆமே.**

இறைவனைத் தேடவல்லவர்கட்கு எமன் இல்லை. அதாவது அழிவில்லை. அவ்வாறு தேடுபவர்கள் அரசர்களாகும் சிறப்பும் அடைவர். இது மேன்மேலும் இறைவனைத் தேடவல்லார்கள் அறிந்த உண்மையாகும். ஆகவே நீங்களும் இந்த உண்மையினை உடல்களோடு கூடியவர்கட்கும் சொல்லலாம்.

**திருவருள் துணையால் அறிவுக்கு அறிவாம் சிவனை இடையறாது நினைக்கும் நினைப்பாகிய நாட்டமுள்ளார்க்கு இறப்பில்லை இதற்கு மார்க்கண்டேயர் கதையை மனங்கொள்க.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடம்பில் இறைவன் உளன்

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே.

உடம்பின் அருமை தெரிவதற்கு முன்பு, அதனைக் குற்றமுடைய பொருளாக எண்ணியே இருந்தேன். பின்னர் உடம்புக்குள்ளே சிறந்த பொருள் இருப்பதை அறிந்து கொண்டேன். உடம்புக்குள்ளே சிறந்தவனாகிய இறைவன் கோயில் கொண்டு வீற்றிருக்கின்றான் என்பதை உணர்ந்து கொண்டேன். ஆகவே, இவ்வுடம்பை நான் கண்ணும் கருத்துமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

**காயமே கோயிலாக என தேவாரமும் கூறுகின்றது. இத்தகைய உடம்பினைப் பேண தினமும் காய்கறி, இலைவகை, கனிவகைகளை அதிகளவில் உணவில் சேர்க்க வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சாட்சர நடனச் சிறப்பு

**பொற்பாதம் காணலாம் புத்திரர் உண்டாகும்**
**பொற்பாதத் தாணையே செம்புபொன் ஆயிடும்**
**பொற்பாதம் காணத் திருமேனி ஆயிடும்**
**பொற்பாத நன்னடம் சிந்தனை சொல்லுமே.**

ஞானிகளே சிவபஞ்சாட்சர மந்திரத்தைச் செபித்து வந்தால், இறைவனது திருவடிகளைத் தரிசிக்கலாம். ஞானப் பிள்ளைப் பேறு கிடைக்கும் இறைவனது திருவடி ஆணையாகக் கூறுகின்றேன். செம்புகூடப் பொன்னாகும் இறைவன் திருவடிகளைக் கண்டு அவன் வடிவமாகவே விளங்கலாம். ஆகவே பஞ்சாட்சர நடனத்தின் தியானச் சிறப்பினை மக்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள்.

**"குனித்த புருவமும் குமின் சிரிப்பும் என தொடங்கி**
**இனித்தமுடைய பொற்பாதம் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே"**
**என்கிறார் அப்பர் பெருமான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடப் பிறவியின் அருமை

**பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்**
**பெறுதற்கரிய பிரான்அடி பேணார்**
**பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்**
**பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.**

மக்கள் பிறப்பு பெறுதற்கு அருமையான பிறப்பு. அதைப் பெற்றும் அடைதற்குரிய இறைவன் திருவடிகளைப் போற்றாமல் மக்கள் பொழுதை வீணாகக் கழிக்கிறார்களே. இதனால் அடை தற்கரிய பேற்றை இழந்தவர்களே ஆவார்.

**மானிடராக "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என ஞானசம்பந்தரும் "மனிதப் பிறவியும் வேண்டுவதே" எனவும் நாவுக்கரசரும் குறிப்பிடுகின்றனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மாணாக்கன்

**சற்குணம் வாய்மை தயாவிவே கந்தண்மை**
**சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே**
**சிற்பர ஞானம் தெளியத் தெளிவோர்தல்**
**அற்புத மேதோன்றல் ஆகும்சற் சீடனே.**

நல்ல சீடனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் நல்ல குணம், சத்தியம், இரக்கம், நல்ல அறிவு, பொறுமை, நல்ல குருவின் திருவடிகளை நீங்காது ஒழுகல், தத்துவப் பொருளான இறைவனைத் தெளிதல், சிந்தித்தல், மனதிலே இறை காட்சி தோன்றல் என்பன.

**நல் மாணாக்கராகிய ஆரணி குருவின் வயலின் நீரை பாதுகாக்க இரவு முழுதும் வயல் வரம்பில் நீரில் விறைத்தபடி படுத்திருந்த கதையை மனங்கொள்க.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் அமைப்பு

ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடல்ஏறென நிற்கும்
ஆய பலிபீடம் ஆகும்நற் பாசமாம்
ஆயஅரன்நிலை ஆய்ந்துகொள் வார்க்கே.

அருளே திருமேனியாகக் கொண்ட சிவலிங்கம் தான் ஆதியாய பதியாகும். வீரமுடைய எருதாகச் சிவலிங்கத்தின் முன்னே அச் சிவலிங்கத்தைப் பார்த்துக் கொண்டு படுத்திருப்பது அநாதியாகிய சீவான்மா ஆகும். அந்த ஏற்றிற்குப் பின்னால் அமைந்திருக்கும் பலிபீடம் பாசபந்தமாகும். இவைதாம் இறைவன் கோயில் அமைப்பு என்பதை ஆராய்ச்சி அறிவுடையவர்கள் அறிந்து கொள்வார்கள்.

சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு பாசம் ஆகிய முப்பொருள் உண்மையை கோயில் அமைப்புடன் இம் மந்திரம் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசரே ஐந்து தொழிற்கும் காரணம்

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியதாம்
அரன்அங்கி தன்னில் அமரும் அறையில்சங் காரம்
அரன்உற் றணைப்பில் அமரும் திரோதாயி
அரன்அடி என்றும் அனுக்கிர கம்மே.

சிவபெருமானது உடுக்கை படைத்தலையும் அமைத்தகை காத்தலையும், மழு ஏந்தியுள்ள கை அழித்தலையும், ஊன்றியுள்ள பாதம் மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளுதலையும் உணர்த்து கின்றது.

நடராச வடிவம் உலக இயக்கத் தத்துவமாகும். அன்றே தமிழர் கண்ட மெஞ்ஞான வடிவாகிய நடராசர் திருவுருவம் இன்று சர்வதேச அணு விஞ்ஞான தலைமையக முகப்பில் பிரபஞ்ச இயக்கக் குறியீடாக வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் உள்ளத்தில் குடிகொள்ள வழி

**நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாக கொள்வனே.**

நாடு நகரம் எங்கெனும் உள்ள நல்ல திருக்கோயில்களை தேடித்திரிந்து எங்கும் இறைவனே இருக்கின்றான் என்று உணர்ந்து அவனைப் பாடுங்கள், வணங்குங்கள் வணங்கிய பின் அவன் வணக்கம் பொருந்திய உங்கள் உள்ளத்தைக் கோயிலாகக் கொள்வான்.

**சிவபுராணம் கூறுவது போல அவனருளாலே அவன் தாள் வணங்கும் பேற்றினை மூர்த்தி, தலம் தீர்த்த தரிசன யாத்திரை மூலம் பெற்று சிவனடி சார்வோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமூலர் சிவபோதியின் கீழ் திருமந்திரம் இயற்றல்

**சேர்ந்திருந்தேன் சிவ மங்கை தன்பங்கனைச்**
**சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடு தண்டுறை**
**சேர்ந்திருந்தேன் சிவ போதியின் நிழலிற்**
**சேர்ந்திருந்தேன் சிவன் நாமங்கள் ஓதியே**

அருளாகிய சிவசக்தியின் மணாளன் ஆகிய சிவபெருமானைச் சேர்ந் திருந்தேன். திருவாவடுதுறை என்னும் ஆதியான சிவத் தலத்திலே சிவபோதியாகிய அரச மர நிழலிலே சிவபெருமானுடைய பெரும் புகழைப் பாடும் திருமந்திரங்களை ஓதிய வண்ணம் சிவனோடு ஒன்றித்து மகிழ்ந் திருந்தேன்.

**திருவாவடுதுறை திருஞானசம்பந்தர் வந்த போது மண்ணில் புதைக்கப்பட்டிருந்த திருமந்திர செப்பேடுகளை தோண்டி எடுத்து தலையில் சுமந்து திருமூலர் சமாதித் திருக்கோயிலை வலம் வந்தார் என்ற செய்தி கவனிக்கத்தக்கது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

**வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி**
**வாழ்கவே வாழ்க மலம் அறுத் தான்பதம்**
**வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்**
**வாழ்கவே வாழ்க மலம்இலான் பாதமே.**

## திருமந்திரம்

- சைவசமயிகளினது ஆதி ஆகமமாகும். சேக்கிழாரின் பெரியபுராணத்தின்படி பல ஆயிரம் ஆண்டுகளிற்கு முன் திருமூல நாயனாரால் இயற்ற தொடங்கப்பட்ட இத் திருமந்திரங்கள் சைவ சித்தாந்த மெய்யியலினை உலகிற்கு முதலில் அறிமுகம் செய்த சைவர்களின் முதனூலாகும்.

- மெஞ்ஞான விஞ்ஞான அறநெறிக் கருவூலமாக அமைந்துள்ள இந்நூல் எம் குழந்தைகள் முதல் பெரியோர் வரை அறிந்திருக்க வேண்டிய அருமையான எளிமையான கருத்தாழமிக்க இத் தமிழ் மந்திரங்கள் அன்பே சிவத்திற்கு உயிர் கொடுக்கும் சிவஞானப்பனுவல்களாகும்.

- வருடத்தின் ஒவ்வொரு வாரமும் ஒரு திருமந்திரம் என மனனம் செய்து உயரிய கருத்துக்களை உள்வாங்கும் வண்ணம் 50 இனிய திருமந்திரங்கள் இச்சிறு கையேட்டில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

**யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் — திருமந்திரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ மகாசபை

## ஆன்மீக - மனிதநேய இணையம்

(பதிவு இல - HA/4/JA/318)

### தூரநோக்கு

சீரிய மனிதநேய மிக்க அறநெறிச் சிந்தையுடைய
சுதேசப் பண்பு மிகுந்த வளமான
சமுதாயத்தை உருவாக்கல்

### இணைய அமைப்புக்கள்

சைவநெறிக்கூடம்
சிவஞான சித்தர் பீடம்
சிவதொண்டர் அமைப்பு
சிவமங்கையர் அமைப்பு
சிவத்தமிழ் மானிட விடியற் கழகம்

இணையத்தளம் : www.saivamahasabai.com
மின்னஞ்சல் : saivamahasabai@gmail.com
தொலைபேசி : 021 221 2414

தலைமையகம் : சைவ மகாசபை
பழைய தபாற்கந்தோர் வீதி,
தலையாழி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

Printed by : நாவலர் அச்சகம், 021 2231644

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org